NEWS RELEASE

SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Deemed to be University)
Porur, Chennai-600 116. Telefax: 044-23860217. www.sriramachandra.edu.in

# ‘BIOLOGICALS GIVE NATURAL HEALING IN ORTHO PROBLEMS’

Chennai,
29th March 2019.

“Biologicals hold great promise in treatment of orthopaedic problems but cost will be the most inhibiting factor for some time to come. But if countries invest in volumes and guarantee bio-product manufacturers a fair return on their investments it can be made available to a large number of patients when the cost will certainly come down” said Dr.M.S.Dhillon, President Indian Biologics Orthopaedic Society speaking at IBOS second annual conference at Sri Ramachandra Institute of Higher Education and Research here today. About a dozen international and national leading researchers on stem cell and gene therapy who are part of the over 350 participants at the meet, he said, are working independently in their town institutions around the globe and it is time that a united and concerted move is made to bring the fruits to the suffering patients worldwide.

Inaugurating the conference Dr. B.Samuel Chittaranjan, HOD, Orthopaedic Surgery, Believers Church Medical College, Tiruvella, Kerala said biologics, especially cell biology should become part of teaching and training in Orthopaetics in addition to the conventional medicine, surgery and physiotherapy.

Speaking on the occasion Dr.P.V.Vijayaraghavan, Vice Chancellor, SRIHER said biological products not only provide a variety of options but moves towards a more natural healing.

Organising Chairman of the conference and Director, Centre for Sports Science and HOD Arthroscopic Surgery, SRMC, Dr.S.Arumugam said that recent techniques and concepts using natural biological substances like PRP, BMAC, Stem-cells, Adipocytes, Autologous Conditioned Serum, Gene Therapy have revolutionised the management of various painful orthopaedic conditions. This would be discussed at the conference and there will be hands-on workshops. The proceedings of the conference have been made available live over webcasting for the medical practitioners who could not attend the conference in person, he added.

…………………
For more information pl, contact…. Dr. S. Arumugam, Director, Centre for Sports Science, SRIHER, 9840036099 Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in

SRI RAMACHANDRA

NEWS RELEASE

INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH

(Deemed to be University)

Porur, Chennai-600 116. Telefax: 044-23860217. www.sriramachandra.edu.in

# "உயிரி பொருட்கள் முடநீக்கியல் பிரச்சினைக்கு இயற்கை நிவாரணம் தரும்"

சென்னை, மார்ச் 29, 2019

"முடநீக்கியல் பிரச்சினைகளுக்கு உயிரி பொருட்கள் மிகச்சிறந்த பலன் அளிக்க முடியும்" ஆனால், அதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது, அதற்கான செலவாகும். ஆனால், உயிரி பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்களுக்கு அரசுகள் லாபம் சம்மந்தப்பட்ட வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் இவை பலருக்கு பயன்படுத்தப்பட்டு விலை குறைந்து அனைவரும் பயன்பெற வாய்ப்புள்ளது என்று உயிரி முடநீக்கியல் இந்தியக் கழகத்தின் தலைவர் Dr. M.S. தில்லான் ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் இன்று துவங்கிய ஆண்டு மாநாட்டில் கூறினார்.

350க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் பல நாடுகளிலிருந்து கலந்து கொண்டுள்ள சில முடநீக்கியல் அறுவை சிகிச்சைத் துறை ஆய்வாளர்கள் தனித்தனியாக உலகெங்கும் ஸ்டெம்செல் மற்றும் மரபணுசார் சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதாகவும் இவர்கள் அனைவரும் இணைந்து செயல்படும் போது இந்தத் துறையில் ஏற்படும் பயன்கள் உலகெங்கும் அனைத்து மக்களுக்கும் சென்று சேரும் என்று அவர் கூறினார்.

மாநாட்டை துவக்கி வைத்து பேசிய கேரளாவின் திருவெளாவிலுள்ள பிலீவர்ஸ் சர்ச் மருத்துவக்கல்லூரியின் முடநீக்கியல் அறுவை சிகிச்சைத்துறை தலைவர் Dr. B. சாமுவேல் சித்தரஞ்சன், உயிரி பொருட்கள், குறிப்பாக திசு உயிரியல், முடநீக்கியல் துறை மாணவர்களுக்கு கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறினார். நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைவேந்தர் Dr. P.V. விஜயராகவன், உயிரி பொருட்கள் பலதரப்பட்ட சிகிச்சை முறை வாய்ப்புகளை அளிப்பதோடு இயற்கையான நிவாரணம் அளிக்கிறது என்று கூறினார்.

மாநாட்டுத் தலைவரும் ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மையத்தின் முடநீக்கியல் நுண்துளை அறுவை சிகிச்சைத் துறைத் தலைவரும் விளையாட்டு அறிவியல் மையத்தின் இயக்குனருமான Dr. S. ஆறுமுகம், இன்றைய அதிநவீன முடநீக்கியல் சிகிச்சையில் ஸ்டெம்செல், இரத்த, திசு மற்றும் மரபணு பொருட்களின் பயன்பாட்டால் மிக நல்ல சாதனைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் நடைபெறும் பயிலரங்கு ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் விளையாட்டு அறிவியல் மையம் நடத்தும் உயிரி முடநீக்கியல் இந்தியக் கழகத்தின் இரண்டாவது ஆண்டு மாநாட்டின் முக்கிய அங்கமாக இருக்கும்.

இதில் நேரடியாக நிபுணர்கள் சிகிச்சைகளை செய்து காட்டி விளக்குவார்கள். இவற்றை வலைதளம் மூலம் உலகெங்கிலும் உள்ள மருத்துவர்கள் நேரடியாக பார்க்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது, என்று கூறினார்.

………

மேலும் விவரங்களுக்கு …. Dr. S. Arumugam, Director, Centre for Sports Science, SRIHER, 9840036099

Mr. T.G.Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in